மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 03.06.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

11) ஓலைப்பட்டி கிராமம் சர்வே எண்கள்.248/1A1, 1A2, 1B ஆகியவை மந்தி (எ) காவேரிக்கு பாத்தியப்பட்டவை என்றால், சரிதான். மேற்படி மந்தி (எ) காவேரிக்கு அம்மாசி, சித்தன், சின்னப்பையன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி மந்தி (எ) காவேரி தான் உயிருடன் இருக்கும் பொழுதே தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தன் மகன்களுக்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால், சரியல்ல. அவர் இறந்ததற்கு பின் தான் அவரது வாரிசுகள் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர். அவ்வாறு மேற்படி மந்தி (எ) காவேரியின் வாரிசுகள் சொத்தை வாய்மொழியாக பிரித்துக்கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

12) மந்தி (எ) காவேரி என்பவரின் வாரிசுகள் தான் இவ்வழக்கின் வாதிகளும், பிரதிவாதிகளும் என்றால், சரிதான். மேற்படி மந்தி (எ) காவேரி இறந்ததற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் எப்போது அவ்வாறு வாய்மொழி பாகம் பிரித்து கொண்டனர் என்ற விவரத்தை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த பதிலுரையிலோ, எங்களால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.341/2015 என்ற வழக்கின் வழக்குரையிலோ, நாங்கள் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். மந்தி (எ) காவேரி தான் உயிருடன் இருக்கும் பொழுது அவ்வாறு தன் சொத்துக்களை பிரித்து கொடுத்ததால் தான் நாங்கள் அது குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

3) இவ்வழக்கில் A–செட்டியூல்ட் சொத்தாக காட்டப்பட்டுள்ள ச.எண்.248/1A1 ல் உள்ள சொத்துக்கள் சித்தனுக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்டவை என்றால், சரிதான். மேற்படி சித்தன் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், நான்கு வாரிசுகள். அவர்கள்

பெயர் 1. பழனி, 2. காவேரி, 3. ஆறுமுகம், 4. குழந்தைப்பையன் ஆகும். மேற்படி நபர்கள் தான் இவ்வழக்கில் 1 முதல் 4 வரையிலான வாதிகள் என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி சித்தன் என்பவர் தன் சொத்துக்கள் குறித்து எவ்வித ஏற்பாடுகளும் செய்யாமல், 1 முதல் 4 வாதிகளை தன் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால், சரிதான்.

14) 1 முதல் 4 வாதிகள்தான் மேற்படி சித்தனுக்கு பின்னிட்டு அவரது சொத்துக்களை அனுபவித்து வருகின்றனர் என்றால், சரிதான். ச.எண்.248/1A2 ல் உள்ள சொத்துக்கள் சின்னப்பையனுக்கு வாய்மொழி பாகம் மூலம் ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி சின்னப்பையனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், பழனி, கந்தசாமி என இரண்டு வாரிசுகள் ஆகும். மேற்படி கந்தசாமி தான் இவ்வழக்கில் 5ம் வாதி என்றால், சரிதான். மேற்படி சின்னப்பையன் இறந்ததற்கு பின்னிட்டு மேற்படி பழனியும், கந்தசாமியும்தான் சின்னப்பையனுக்கு வாய்மொழிபாகம் மூலம் ஒதுக்கப்பட்ட சொத்துககளை அனுபவித்து வருகின்றனர் என்றால் சரிதான். ச.எண்.248/1B ல் உள்ள சொத்துக்கள் அம்மாசிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான். அம்மாசி தற்போது இறந்துவிட்டார். மேற்படி அம்மாசியின் வாரிசுகள் தான் இவ்வழக்கிலுள்ள பிரதிவாதிகள் என்றால், சரிதான்.

15) எனக்கு திசைகள் நன்றாக தெரியும் என்றால், சரிதான். சிந்தாமணியூர் மெயின் ரோடு தென்வடலாக அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு மேற்குபுறமாக ச.எண்.248/1A3 அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 க்கு மேற்குபுறமாக வடபுற எல்லையில் முதலில் ச.எண்.248/1A1ம் அதை ஒட்டி தென்புறமாக ச.எண்.248/1A2ம் அதை ஒட்டி தென்புறமாக ச.எண்.248/1Bம் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

16) மேற்படி சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு மேற்குபுறமாக அமைந்துள்ள ச.எண்.248/1A3 லிருந்து, ச.எண்.248/1B க்கு செல்லவேண்டும் என்றால், மேற்படி நிலங்களுக்கு தென்புறம் அமைந்துள்ள 10 அடி அகல தடவழியாகத்தான் செல்லவேண்டும் என்றால், அவ்வாறு 10 அடி அகல தடவழி உள்ளது. ஆனால் அது எங்களுக்காக நாங்கள் ஏற்படுத்திக்கொண்டது. ஆனால், ஒவ்வொரு பாக நிலத்திலும் இருந்து நேரடியாகவே சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு செல்லமுடியும். அவ்வாறு மேற்படி 10 அடி அகல தடவழி எங்களுடைய நிலத்தில் எங்களுடைய தேவைக்காக ஏற்படுத்திக்கொண்டது என்பதை இவ்வழக்கின் பதிலுரையிலோ, அல்லது நாங்கள் தாக்கல் செய்த வழக்கின் வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால், சொல்லியுள்ளோம். ச.எண்.248/1A3 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எங்களுக்கு பாத்தியப்பட்டது.

17) ச.எண்.248/1B யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், அதுவும் எங்களுக்குதான் பாத்தியப்பட்டது. மேற்படி தென்புறமாக உள்ள 10 அடி அகல தடவழி எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்றால், ச.எண்கள்.248/2, 1A3 ஆகியவற்றின் வழியாக வருகிறது. சுமார் 80 வருடங்களாக மேற்படி தடவழி அமைந்துள்ளதா என்றால், சுமார் 60 வருடங்களாக உள்ளது.

18) மேற்படி சிந்தாமணியூர் மெயின் ரோட்டிலிருந்து எந்த சர்வே எண் வழியாக ச.எண்.248/1A2 ல் உள்ள நிலத்திற்கு செல்ல முடியும் என்றால், சர்வே எண் எனக்கு சரியாக தெரியவில்லை. எந்த சர்வே எண் வழியாக வாதிகள் அவர்களது பாக நிலத்திற்கு சென்று வருகிறார்கள் என்பதை இவ்வழக்கின் பதிலுரையிலோ, நாங்கள் தாக்கல் செய்த வழக்கின் வழக்குரையிலோ, குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால், சொல்லியுள்ளோம். அவ்வாறு எந்த சர்வே எண் என நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சர்வே எண் எனக்கு எனக்கு தெரியவில்லை. நான் அவ்வாறு எந்த சர்வே எண்ணும் குறிப்பிடவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்

என்றாலும், சரியல்ல.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.